
பொறிஞர் கவிஞர் **முத்தமிழ் விரும்பி**யின்

‘2020 தை மாதத்தில் இன்று’ கவிதையில்

அடிக்கருத்தியல் ஆய்வு

(Thematic Study of a Tamil Poem)

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்

மதுரை – 625 018, Mob. : 7010997639.

முத்தமிழ் விரும்பியின்

‘2020 தை மாதத்தில் இன்று’ கவிதையில்

அடிக்கருத்தியல் ஆய்வு

(Thematic Study of a Tamil Poem)

முனைவர் செ. இராஜேஸ்வரி , **M. A., M. Phil., Ph.D.,**

சந்திரோதயம் பதிப்பகம்

மதுரை – 625 018., ***Mob. : 7010997639***

நூல் விவரம்

நூலின் பெயர்	:	கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு
துறை	:	கவிதைத் திறனாய்வு
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/460, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர். மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	ஏப்ரல் 2020
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	67
விலை	:	Rs.100/-

- - - - -

Title	:	*Kavithaiyil Adikkaruthiyal Ayvu*
Subject	:	*Poetry Criticism*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/460, Kambar 2nd Street,* *Kambar Salai, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publishing	:	*April 2020*
Pages	:	*67*
Price	:	*Rs.100/--*

பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி



பொறிஞர் கவிஞர், கட்டுரையாளர், பாடலாசிரியர், நாடக நடிகர், குறும்பட நடிகர், திரைப்பட நடிகர், ஆவணப்பட இயக்குனர், சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், இலக்கியச்செயல்பாட்டாளர், திரைக்கதையாசிரியர், வசனகர்த்தா, இயக்குனர், சொற்பொழிவாளர், விமர்சகர் முத்தமிழ் விரும்பி தஞ்சை மண்ணை சேர்ந்தவர். கோவை பி.எஸ்.ஜி தொழில்நுட்ப கல்லூரியில் பொறியியல் படித்தவர். திருச்சி பெல் நிறுவனத்தில் துணை இயக்குனராக பணியாற்றிவருகிறார்.

நெருஞ்சி இலக்கிய இயக்கத்தை நிறுவி ஆண்டுதோறும் கவிஞர் பத்திரிகையாளர் எழுத்தாளர் எனப் பல துறை சார்ந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்.

நெருஞ்சி என்னும் காலாண்டு இலக்கிய இதழை நடத்திவருகிறார். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி குழு உறுப்பினர் ஆவார். கோவை பாரதியார்

பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆட்சி மன்றக் குழு உறுப்பினரும் ஆவார்.

கவிஞருடைய ***பூ மர நிழல், திட்டிவாசல் பெண்ணொருத்தி, உன்னோடு உரையாடுதல், காதல் மொழி, பார்வையில் பூத்த நிலா, தேனடையும் வரலாறு*** *(அச்சில்) ஆகிய கவிதை நூல்கள் ஆங்கிலத்தில்* ***Shade of the Flowing Tree, Songs of Dryness, Speaking with You, The Language of Love, A Lady at the Little Gate, Honey Hive*** *முனைவர் செ. ராஜேஸ்வரி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, சென்னை எமெரால்டு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. "Ambrosial Kiss" என்ற மொழிபெயர்ப்புக் கவிதை திறனாய்வு நூல் ஒன்றையும் எமெரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

கவிஞருடைய கவிதைகள் குறித்து ***"பூமர நிழலின் களமும் காலமும், முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும், '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, கவிதை காதல், கவிதை முகங்கள்"*** *ஆகிய திறனாய்வு நூல்களை மதுரை, சந்திரோதயம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

கவிஞருடைய பூமர நிழல் கவிதைத் தொகுப்புக்கு ***'கவிதை உறவு 2004'*** *முதற் பரிசு வழங்கியது. மேலும் தமிழ்நாடு கலை*

இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியு செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய பாரதி விழா 2004 பரிசுப் போட்டியிலும்பரிசு பெற்றது.

கவிஞர் ***கடற்குதிரை பதிப்பகத்தின்*** *மூலமாக கவிஞர் பலருடைய கவிதைகளையும் வேறு பல நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அண்மையில் சந்தாலி மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிட்டு இருக்கிறார்.*

மலேசியாவில் மலாய் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் கவிஞருக்குத் ***தமிழ் இலக்கியச் செம்மல்*** *என்ற விருது வழங்கப்பட்டது. இலங்கையில் யாழ்ப்பானம் பல்கலைக்கழகம் கவிஞருக்கு* ***'திருவள்ளுவர் விருது'*** *வழங்கி சிறப்பித்துள்ளது.*

கவிஞருடைய, நேற்றின் பாதங்கள், தஞ்சை பெருவுடை நிலம் ஆகிய கவிதை நூல்கள் விரைவில் அச்சில் வெளி வரவிருக்கின்றன இவ்விரு கவிதைத் தொகுப்புகளும் கட்டுரைகளும் விரைவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட இருக்கின்றன.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி போன்ற வேறு சில தன்னாட்சி கல்லூரிகளும் பாடமாக வைத்துள்ளன. தமிழ்

ஆராய்ச்சியாளர்கள் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர். .

அணிந்துரை

வி. ஆனிலெட்பாமி

சங்க அகப்பாடல்களில் அடிக்கருத்துகள் என்னும் தலைப்பில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையின் முனைவர் கதிர். மகாதேவன் அவர்களின் மேற்பார்வையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.

அடிக்கருத்தியல் ஆய்வு நோக்கில் இந்நூல் (கவிஞர் முத்தமிழ் விரும்பியின் "2020 தை மாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு) வெளிவருவது குறித்து பேருவகை கொள்கிறேன். "2020 தை மாதத்தில் இன்று" எனும் கவிதையின் அடிக்கருத்தாகிய "நினைத்தது நிறைவேறவில்லை" எனும் நுண்பொருளை இருவேறு கோணங்களில் இந்நூலாசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்கள் தெளிவுபடுத்துகிறார்.

அடிக்கருத்து ஆய்வு முதல் பகுதியில் கவிதை உள்ளடக்கிய சூழல், உளவியல், சமூகம், காலம், இடம், படிமம், தொன்மம்,

வரலாறு, சீரிய நகரம், ஊர், மன்னன் போன்ற பாடுபொருள்கள் வழி அடிக்கருத்தியல் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இக்கவிதை எத்தகைய கருத்துப் பரப்புகளிலிருந்து அடிக்கருத்துக்களை கொண்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

அடிக்கருத்தியல் ஆய்வு இரண்டாம் பகுதியில் கவிதையின் கட்டமைப்பை அறுதியிட்டு, அடிக்கருத்து அலகுகளை நிரல்படுத்தி ஆய்வு செய்யும் முறை கையாளப்படுகிறது.

மேலும் பன்னாட்டு மொழித் திறனாளிகள் அடிக்கருத்து பற்றி கூறும் செய்திகளும் இடம்பெறுகின்றன.

அடிக்கருத்தியல் ஆய்வுகள் வழி மானிட இனம், பண்பாட்டு இயல்புகளை அறிந்து கொள்ள முடிகிறது. உண்மைகள் சுட்டப்படுகின்றன. தனித்தன்மைகள் தெளிவாகின்றன. ‘அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்’ எனும் தமிழனின் உள்ளப் பெருமிதமாகிய அடிக்கருத்து இக்கவிதைக்குச் சிறப்பு சேர்க்கிறது. இலக்கிய ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இந்நூல்

ஊன்றுகோலாய் உதவும் என்பதில் ஐயமில்லை.

இலக்கியச் சேவையில் தொடர்பணி மேற்கொண்டு ஆய்வு கட்டுரைகளையும், சீரிய நூல்களையும் வெளியிட்டு வரும் இந்நூலாசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். அவர்களின் இத்தகைய பணி பல்லாண்டு தொடர என் வாழ்த்துகள்.

நூலாசிரியர் பற்றி



முனைவர்.செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். ***புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி*** *போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார்.* ***மொழி பெயர்ப்பியல் ஆய்வு*** *என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.*

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய

மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளி நாட்டவருக்குத் தமிழ் கற்பிப்பதற்கு ஏற்ற வகையில் பாட நூல் ஒன்றை உருவாக்கினார்.

அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்குத் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி **“ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100”** என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாகக் கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.

எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது ***வெற்றித் திருமகன்*** *என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 18 நூல்கள் வெளிவந்துள்ளன.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை நூல்களை இவர் முறையே **“Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)”,** *என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் ***பூ மர நிழலில் களமும் காலமும்***

மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் ***பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு,*** *முத்தமிழ் விரும்பியின்* ***கவிதை காதல், கவிதை முகங்கள் (தொகுப்பாசிரியர்)*** *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், தமிழகத்தில் பெண் தெய்வ வழிபாடு,*** *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார்.* ***காணாமல் போன கடவுளர்*** *என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி வருகிறார்.*

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில்*

வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **"என்னோட ராசி நல்ல ராசி"** என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் **'மர வழிபாட்டின் வேர்களைத் தேடி *(Deep into the roots of Tree worship)*, காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு'** போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

“2020 தை மாதத்தில் இன்று”

தஞ்சையில்
பெருவுடையாரும்

சோழப் பெருவேந்தன் இராச ராசன் இருவரும்
கொடிமரத்துக்கு தென்மேற்கு மூலையில்
கொசுக்களை விரட்டக்
கால்நீட்டிக் காலாட்டிக் கதையாடினர்

1000 ஆண்டுகள்
கடந்து நிம்மதியாக உறங்கப் போவதாக
என்னிடம் உறுதிபடக் கூறினர்

எத்தனை படையெடுப்பு

எத்தனையெத்தனை ஏகடியங்கள்

தப்பிப் பிழைத்த
தவமகவு
தொல்காப்பியக் காப்பியன்
நானிலத்தில்
வேந்தன் மேய தீம்புனல் உலகென்றான்

ஆதினத்துக் கைக்குத்தல் அரிசிக்கஞ்சி
குடித்தவன்
காட்டிக் கொடுக்கிறான்

எத்தனையெத்தனை
மொழிகள்
வந்து போயின

நீச்சம் பெற்றன தேவபாஷைகள்

நீவிர் அறியாததா

இளைஞன்
பெருவேந்து
இளவரசன்
இராசேந்திரன்
இறுதியாய்ச் சொன்னான் :

அப்பா!
புறந்தூய்மை நீரால்

அகந்தூய்மை
வாய்மையால்

நமது வள்ளுவம் காட்டும்
ஆதி விதி யென்றான்

விண்மீன்கள் போர்த்துக் கொள்ளும்
மருதத்து இரவிதனில்
உரையாடிய களிப்பில்

தூங்குக நண்பர்காள் !

காவிரி நீர்
பொருநைநதி வையை மணிமுத்தாறு நீர்க்
குடமெடுத்துக் குடமெடுத்துக்
கோபுரக் கலசம்
முழுக்கு செய்தோம்

மாற்றமில்லை
மாறவும் மாறாது

மாநகராட்சிக் குழாய்
கல்லணைக் கால்வாயில் இன்றும்
நீருண்டு

மருதத்தில்
அடுத்த மாசம்
அறுவடைநாள்

முப்போதும்
உங்கள் கனவிலும் தமிழில் தான்
உரையாடுவேன்.

காவிரித் தாய்நதியின்
தொப்புள் கொடி உறவில்
இன்றும் இன்னும்
குருதியின் அணுக்கள்
மாறலியே !

(இக்கவிதை முத்தமிழ் விரும்பியின் ''தேனடையும் வரலாறு'' என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது).

‘2020 தை மாதத்தில் இன்று’ கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு

அடிக்கருத்து என்பது ஒரு கலைப் படைப்பின் உட்கரு அல்லது நுண்கரு [nucleus] ஆகும். இக் கருவின் வளர்ச்சி முழுப் படைப்பை உருவாக்குகின்றது. கவிதை, கதை, நாடகம், எனப் படைப்புகளை உருவாக்கும் போது அடிக்கருத்துத் தெளிவாகப் கலையின்பம் நுகர்வோரைச் சென்று சேரும் வகையில் பாடு பொருள் கட்டமைக்கப் படுகின்றது.

இக்கட்டமைப்புக்குரிய அடித்தளத்தை முனைப்புக் கருத்துக்கள் உருவாக்குகின்றன. உட்கருவை உயிர் என்று கொள்ளும்போது பாடு பொருளை உடம்பு என்றும் முனைப்புக் கருத்துக்களை உடம்பின் உறுப்புக்களாகவும் கொள்ளலாம். இக்கட்டுரை கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 2020 தை மாதத்தில் இன்று என்ற கவிதையை அடிக்கருத்தியல் ஆய்வு முறையில் அணுகுகின்றது.

ஒரு கவிதை என்பதில் பருப்பொருளும், நுண் பொருளும் கலந்திருக்கும். வாசகருக்குத் திரும்பத் திரும்ப நினைவு கூர வைக்கும் நுண்பொருள் அடிக்கருத்துத் தகுதியைப் பெறுகின்றது. அவ்வகையில் சமஸ்கிருதத்தை வலியுறுத்துவோருக்கும் தமிழ்ப் பற்றாளருக்குமான பிறவிப் பண்பு மாறவில்லை என்ற நுண் பொருள் இக்கவிதையின் அடிக்கருத்துத் தகுதியைப் பெறுகிறது. இதுவே கவிதையின் மையப் பொருளும் ஆகும். இம் மையப் பொருளை நோக்கிச் செல்வனவாக கவிதையின் மற்ற பகுதிகள் அமைய வேண்டும், என்று தீம்ஸ் இன் லிட்ரேச்சர் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

அடிக்கருத்தியல் ஆய்வு

அடிக்கருத்தியல் ஆய்வு என்பது சங்க இலக்கியப்பாடல்கள் தொட்டு இன்றைய நவீன கவிதை வரைத் தமிழ் திறனாய்வுலகில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடிக்கருத்து மற்றும் முனைப்புக் கருத்து பற்றிய விளக்கங்களை எடுத்துரைக்கும் போது கலாநிதி க. கைலாசபதி தமிழ் ஹீரோயிக் பொயற்றி [TAMIL HEROIC POETRY] என்ற நூலில் சங்க இலக்கியப் பாடல்களில் திணை என்பதை கவிதைச் சூழல் [POETIC SITUATION]

என்றும், துறை என்பதை அடிக்கருத்து *[POETIC THEME]* என்றும் குறிப்பிடுவார். அடிக்கருத்து என்பது ஒரு கவிதையின் மையப்பொருள் அல்லது நுண் கரு அல்லது மனித இனத்துக்கு உரிய ஒரு பொதுப்பண்பு *(central universal or common ideas are themes).* ஆகும். முனைப்புக் கருத்து என்பது ஒரு கவிதையை உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்யும்போது அதில் ஆராயப்படும் கூறுகள் *(content analytic parts are motifs).* ஆகும் என்பது பலரும் ஏற்றுக்கொண்ட பொது விளக்கம் ஆகும்

ஒரு கவிதையில் பல்வேறு மையப் பொருள்கள் காணப்பட்டாலும் அதன் நுண் கருவான ஒரு கருத்து மட்டுமே அடிக்கருத்து என்ற சிறப்புத் தகுதியைப் பெறுகின்றது. அடிக்கருத்தியல் ஆய்வு செய்யப்படும் போது உலகப் பொதுமைக் கூறு தெளிவாகக் கண்டறியப்பட வேண்டும். காதலும் வீரமும் உலகப் பொதுவான இலக்கியக் கருத்துக்கள் என்றாலும் அவற்றின் மேல் கட்டப்படும் முனைப்புக் கருத்துக்களும், அக்கருத்துக்களுக்கு அழகூட்ட பயன்படுத்தும் படிமங்களும் குறியீடுகளும் அந்தந்த மொழிக்கும் நாட்டுக்கும் உரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. அடிக்கருத்தியல் ஆய்வு ஒப்பிலக்கிய ஆய்வுக்கு

வழிவகுப்பதால் உலக இலக்கியம் என்ற ஓர் ஒப்பற்ற பொது நிலைக்கு அனைத்து மொழி வாசகர்களையும் அடிக்கருத்தியல் ஆய்வு அழைத்துச் செல்கின்றது.

அடிக்கருத்து குறித்து மேனாட்டறிஞர்கள் கருத்து

ஏ எஃப் ஸ்காட் Current literary terms என்ற நூலில் அடிக்கருத்து என்பதை ஒரு பொருளின் மையக்கருத்து என்கிறார். ஜே ஏ குடோன் அடிக்கருத்து என்பது 'ஒரு கவிதையின் முழுப் பொருளாகாது; கவிதை சொல்ல வந்த முக்கியக் கருத்து ஆகும். இதை ஒரு கவிதை நேரடியாகவோ மறைமுகமாகவோ எடுத்துக் கூறலாம்' என்பார். இன்னும் சிலர் ஒரு கலைப் படைப்பின் உருவம் அல்லது உள்ளடக்கத்தில் இருந்து பிரிக்க இயலாதது எதுவோ அதுவே அடிக்கருத்து என்பர்.

'2020 தை மாதத்தில் இன்று' கவிதையின் தோற்றம்

'2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் நிறுவனப்படுத்தப்பட்ட இந்து சமயக் கோவில்களில் சமஸ்கிருத ஆதிக்கம் மற்றும் ஆரியரின் சதி தொடர்கிறது என்பது அடிக் கருத்தாக விளங்குகிறது. கவிதையின் பாடுபொருள் என்பது தமிழகத்தில் தஞ்சாவூரில் உள்ள பெருவுடையார் கோவிலில் நடந்த குடமுழுக்கு நிகழ்வில் தமிழ்

பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் தமிழ் ஆர்வலர்கள் மேற்கொண்ட முயற்சியும் அதன் விளைவுகளும் ஆகும். கவிதை எழுதப்பட்ட சூழல் குடமுழுக்கு முடிந்த அன்றைய இரவுப் பொழுதாகும். தமிழ் அமைப்புகள் தமிழின் பண்கேர்புக்காக நீதிமன்றம் வரை சென்று வாதாடியதால் ஒரே ஒரு ஓதுவார் மட்டும் தமிழ்த் திருமுறைகளை ஓதியபடி கோபுரக் குடத்தின் மீது புனித நீர் ஊற்ற அனுமதிக்கப்பட்டார். இதை வெற்றி அல்ல கண் துடைப்பு என்ற எண்ணம் கவிஞரின் உள்ளத்தில் உறுத்தியதால் இக்கவிதை தோன்றியது.

கவிதையும் கற்பனையும்

கவிஞர் குடமுழுக்கு முடிந்த அன்று ஆர்வலர்களும் பெருவுடையார் (sentence) என்று அழைக்கப்படுகின்ற அக்கோவிலில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானும், கோவிலை கட்டிய இராஜராஜ சோழனும் தமிழில் குடமுழுக்கு செய்யப்பட்டதாக ஏமாந்து போய் 'ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்று தான் நாங்கள் உறக்கம் கொள்ளப் போகிறோம்' என்று பேசி மகிழ்வதாகக் கற்பனை செய்து படைத்துள்ளார். ஆனால் கவிதை முடியும் பொழுது கவிஞர் தன்னுடைய கருத்தை முத்தாய்ப்பாக எடுத்துரைக்கிறார்.

காவிரி தாய் நதியின்
தொப்புள் கொடி உறவில்
இன்னும் இன்னும்
குருதியின் அணுக்கள்
மாறலையே

என்று கவிதை நிறைவுறுகிறது.

அடிக்கருத்தைக் காட்டும் முத்தாய்ப்பு வரி

'2020 தை மாதத்தில் இன்று' என்ற கவிதையில் இருபது நூற்றாண்டுகள் ஆன பிறகும் சமஸ்கிருதப் பற்று கொண்ட ஆதிக்கவாதிகளின் மாறாத பிறவிக் குணத்தைக் காட்டும் அடிக்கருத்தாக இரத்த அணுக்கள் என்ற வரி அமைகின்றது. மத்திய ஆசியாவில் இருந்து ஆடுமாடுகளுடன் புறப்பட்டு மேய்ச்சல் நிலம் தேடிக் கங்கைச் சமவெளியில் வந்து தங்கிய ஆரிய இனத்தவர் தென்னகம் நோக்கிப் புலம் பெயர்ந்த போது இங்கு வாழ்ந்தவர்கள் ஆரியர்களின் நினைவாற்றலைக் கண்டு மெச்சிப் பாராட்டினர். அதனைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்ட ஆரியர்கள் மனுதர்ம சாஸ்திரத்தை வலியுறுத்தித் தாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொள்ள மன்னர்களின்

ஆதரவை நாடி அவர்களைக் கொண்டு பெரும் கோவில்களை எழுப்பி இந்துக் கோவில் அரசியலைச் சமுக நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். ஆங்கிலேயரும் அவர்களைத் தொடர்ந்து அம்பேத்கார், பெரியார் போன்றோரும் இந்த ஆதிக்க முறையைக் கடுமையாக எதிர்த்தனர்.

தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் கோவிலும் கோவில் சார்ந்த கலாச்சாரமும், பண்பாடும், பக்தி, இயக்கத்தோடு இணைந்து வளர்ந்தன. மண்ணின் மைந்தர்களை அந்நியப்படுத்த விரும்பிய இனத்தவர் வடமொழியைப் பெருங் கோவில்களில் புகுத்தி சாஸ்திர, சம்பிரதாயம், யாகம், பூஜை, புனஸ்காரங்கள் என்ற பெயரில் கோவில் நிர்வாகத்தையும் கோவில் சார்ந்த நிலங்களின் நிர்வாகத்தையும் தன் அதிகார வரம்பின் கீழ்க் கொண்டு வந்தனர். இக்கருத்தைக் கவிஞரின்

ஆதீனத்து கைக்குத்தல்

அரிசிக்கஞ்சி குடித்தவன்

காட்டிக்கொடுக்கிறான்

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. இவ் வரிகளில் சைவ மடங்களும் மண்ணின் மைந்தர்களுக்கு மக்களின் மொழிக்கு எதிராக

சமஸ்கிருதத்துக்கு ஆதரவாகச் செயல் படுவதைக் குறிப்பிடுகின்றார்.

ஆட்சியாளர் ஆதரித்த மொழிகள்

வட மொழியின் ஆதிக்கம் இன்றுவரை கோவில் நடைமுறைகளில் தொடர்ந்து இருந்து வருவது குறித்து ஆதங்கப்படும் கவிஞர் இன்றைய குடமுழுக்கு நிகழ்ச்சியில் வடமொழியோடு தமிழும் சேர்ந்து இடம்பெறலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததைக் கொண்டு ஆர்வலர்கள் மகிழந்து இருந்ததை

எத்தனைஎத்தனை
மொழிகள் வந்து போயின,

நீச்சம் பெற்றன.
தேவ பாஷைகள்

நீவிர் அறியாததா?

என்று குறிப்பிடுகின்றார். நீதிமன்றத் தீர்ப்பு கண்டு தாங்கள் வெற்றியடைந்து விட்டதாகத் தமிழ் ஆர்வலர்கள் மகிழ்ந்து இருந்தது பரிதாபத்திற்குரியது. ஏனெனில் எப்போதும் குடமுழுக்கு நிகழ்ச்சியில் தமிழில் திருமுறை ஓதுவது மரபு. இப்போதும் திருமுறை ஓதுதல்

நிகழ்ந்தது. எனினும் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்பு திருமுறை ஓதுவாரின் எண்ணிக்கையை அதிகரித்துத் தமிழிலேயே நிகழ்ச்சிகள் நடப்பதைப் போன்ற கண் துடைப்பு நாடகத்தைக் கோவில் நிர்வாகத்தினர் செய்து காட்டினர். தேவ பாஷையான சமஸ்கிருதத்தை மட்டுமே கோவிலில் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கை உடைய பார்ப்பனர்கள் இக் கண் துடைப்புப் பணியை வெற்றிகரமாக நடத்தினர்.

பாடுபொருளை விளக்கிய முனைப்புக் கருத்துகள்

கவிதையின் பாடுபொருளை விளக்குவதில் முனைப்புக் கருத்துகள் கருவியாகச் செயல்படுகின்றன. படைப்பாளிகள் சில சூழலை உருவாக்கி அவற்றின் மூலமாக முனைப்புக் கருத்துகளை அடுக்கிக் கொண்டு செல்வர். இம்முனைப்புக் கருத்துக்களின் ஊடிழையாக அடிக்கருத்தைக் கொண்டு வந்து இறுதியில் வெளிப்படுத்துவது கவிதையின் கட்டமைப்பை அழகாக்கும். இக்கட்டமைப்பு முறை '2020 தை மாதத்தில் இன்று' கவிதையிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

முனைப்புக் கருத்து வெளிப்படும் வகைகள்

கவிதையில் கவிஞர் தான் சொல்ல முனையும் கருத்துக்களை [MOTIFS] சில

சூழல்களை உருவாக்கியும் வேறு நபர்களைக் கொண்டும் உணர்த்துவது கவித்துவ மானதாகும். அவற்றைத் தானே நேரடியாக வெளிப்படுத்தினால் அது உரைநடைத் தன்மை பெற்றதாகிவிடும். கவிதையில் முனைப்பு கருத்துக்கள் இரண்டு வகையாக வெளிப்படுத்தப்படும்.

1. சூழல் சார்ந்த வெளிப்பாட்டு முறை
2. நபர் சார்ந்த வெளிப்பாட்டு முறை.

இக்கவிதையில் குடமுழுக்கு நிகழ்வு என்பது சூழலாகும். இச்சூழலில் குடமுழுக்கு பற்றிய அவதானிப்புகள் வெளிப்படுகின்றன. பெருவுடையார் இராஜராஜனும் பேசுவதும். இராஜராஜனும் அவன் மகன் ராஜேந்திரனும் பேசுவதும் தனிநபர்கள் சார்ந்ததாகும். இவ்வாறு இரண்டு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட முனைப்புக் கருத்துக்கள் இணைந்து அடிக்கருத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

சூழல் சார்ந்த முனைப்புக் கருத்து

'2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் கவிஞர் இரண்டு வகையான சூழலைக் காட்டுகின்றார். 1. பெருவுடையார் கோவிலில் தமிழில் குடமுழுக்கு திருமுழுக்கு நடைபெற்றதாகக் கருதி உரையாடி மகிழ்ந்து அனைவரும் நிம்மதியாக உறங்கப் போகும்

சூழல். இது காவிரி நதிக்கரையில் வாழும் தமிழ் மண்ணின் மைந்தர்கள் சூது மதி படைத்த ஆரியர்களின் சூழ்ச்சியை உணராமல் வெள்ளந்தியாக உறங்கச் சென்ற சூழல் ஆகும்.

தஞ்சையில்

பெருவுடையாரும்

சோழப் பெருவேந்தன்

இராச இராசன் இருவரும்

கொடி மரத்துக்குத்

தென் மேற்கு மூலையில்

கொசுக்களை விரட்டி

கால் நீட்டி காலாட்டிக்

கதையாடினர்

இக்கதையாடலில் கவிஞரும் இவ்விருவருடன் இருக்கின்றார். இக் கற்பனைச் சூழலில் கவிஞரும் உடனிருப்பதாகக் கவி புனைந்தது புதுமை ஆகும்.

ஆயிரம் ஆண்டுகள் கடந்து

நிம்மதியாக உறங்கப் போவதாக

என்னிடம்

உறுதிபடக் கூறினர்.

என்ற வரிகள் பிரகதீச்வரத்தைக் கட்டிய பெருவேந்தன் இராசராசனும் அங்கு உள்ளே கோவில் கொண்டருளும் பெருவுடையாரும் இத்தனை ஆண்டுகாலமும் நிம்மதியில்லாமல் இருந்ததும் இப்போது தமிழில் குட முழுக்கு நடந்த பிறகே நிம்மதியாக உறங்கப் போவதாகக் கூறியதும் கவிஞனின் அவாவைக் காட்டுகின்றது. தன்னுடைய பேரவா நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தானும் அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்ததைப் போல இக்கவிதையைப் படைத்துள்ளார். இது சூழல் சார்ந்த முனைப்புக்கருத்து வெளிப்பாடு ஆகும். இங்கு இவர்களின் உரையாடல் நேரடியாக வாசகருக்குக் காட்டப்படவில்லை. கவிஞரின் தற் கூற்றாக வெளிப்படுகிறது.

நபர் சார்ந்த முனைப்பு கருத்து வெளிப்பாடு

முனைப்புக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் நபர் சார்ந்த வெளிப்பாடு என்பது கவிஞர் தான் சொல்ல முனைந்த கருத்துக்களை நபர்களின் வாயிலாக வெளிப்படுத்துவதாகும். புறத்திணைப் பாடல்களில் வஞ்சினம் கூறல் அகத்திணைப் பாடல்களில் தலைமக்கட் கூற்று, தோழி அல்லது பாங்கன் கூற்று போன்றனவும் இவ்வகைப்பட்டன எனலாம்.

'2020 தை மாதத்தில் இன்று' என்ற இக்கவிதையில் பெருவுடையார் கோவிலைக் கட்டிய இராசராசனிடம் அவன் மகன் இராசேந்திரச் சோழன் இந்த குட முழுக்கில் வாய்மை பிறழ்ந்திருப்பதை உணர்த்துகிறார்.

பெரு வேந்து

இளவரசன்

இராசேந்திரன்

இறுதியாய்ச் சொன்னான்

அப்பா!

புறந் தூய்மை நீரால்

அகந் தூய்மை

வாய்மையால்

நமது வள்ளுவம் காட்டும்

ஆதி விதியென்றான்

இராசேந்திரச் சோழன் தனது தந்தையிடம் தமிழில் குட முழுக்கு நடத்தியதாகப் பொய்யுரைத்து நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். வள்ளுவத்தின் வழி நடக்காமல் கோவில் நிர்வாகிகள் தவறான வழியில் செல்கின்றனர் என்ற வருத்தத்தைப் பதிவு செய்கின்றான். இவனது வருத்தம்

கவிஞரின் வருத்தம் ஆகும். கவிஞர் தனது வருத்தத்தைத் தான் சொல்ல முனைந்த கருத்தை இராசேந்திரன் என்ற ஒரு நபர் மூலமாக எடுத்துரைக்கிறார். இந்த முனைப்புக் கருத்து கவிஞர் வெளிப்படுத்த விரும்பும் அடிக்கருத்துக்கு வாசகரை இட்டுச் செல்லும்.

உல்றிக் வைன்ச்டின் [Ulrich Weinstein] என்ற அறிஞர், டான் ஜூவான் [Don Juan] என்ற ஸ்பெயின் நாட்டு நாட்டுப்புற வீரனைப் பற்றிய அடிக் கருத்தியல் ஆய்வு மேற்கொண்ட போது அடிக்கருத்து நபர் சார்ந்ததென்றும் முனைப்புக் கருத்து சூழல் சார்ந்தது என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் ரேமான்ட் ற்றுசன் [Raymond Trousen] என்ற அறிஞர் இக்கருத்தை முற்றிலுமாக மாற்றி உரைக்கிறார். இவர் அடிக்கருத்தும் சூழல் சார்ந்ததாக வரும் என்கிறார். அதற்குச் சூழலியல் அடிக்கருத்துக்கள் [situational themes] என்று பெயர் சூட்டுகிறார். இன்னொரு வகையாக வீரம் சார்ந்த அடிக்கருத்துக்களைப் [heroic themes] பிரித்துக் கூறுகிறார்.

அடிக்கருத்தைக் கண்டறிதல்

மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்துக்களைக் கொண்டு ஆராய்ந்தால்

சூழலைக் கொண்டு அடிக்கருத்தை வரையறுப்பது கூடாது. சூழலை அடிக்கருத்து விளக்கத்துக்கான பின் புலமாகக் கொள்வதே சரியாகும். படைப்பாளி ஒரு சூழலை உருவாக்கிக் காட்டி அங்கு முனைப்புக் கருத்துக்களை உணர்த்தலாம்; அதற்கு அடுத்த கட்ட நகர்வில் அடிக்கருத்தை உணர்த்தலாம். அடிக்கருத்தைக் கலாரசிகர்கள் உணர்ந்தறிவதும் படைப்பாளி அதனை உணர்த்துவதும் நுட்பமான செயல்பாடுகள் ஆகும். சூழலைக் கண்டறிந்த பிறகும் அடிக்கருத்துக்கான பயணம் தொடர வேண்டும்.

உரையாடல் என்னும் கருவி

'2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் முனைப்புக் கருத்தை வெளிப்படுத்த கவிஞர் உரையாடலை ஓர் கருவியாகப் பயன்படுத்துகிறார். தன்னை உளப்படுத்தியும் தன்னை உளப்படுத்தாமலுமாகக் கற்பனையாக இரண்டு உரையாடல்களைக் கவிதையில் அமைத்திருப்பது அவர் கூற முனையும் கருத்தை நுட்பமாக வாசகருக்கு விளக்குகின்றன. படிமத்திற்கான விளக்கம் கூறுவோர் ஐம்புலன்களுக்கான அனுபவத்தை வழங்குவது படிமம் என்பர்.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் படிமச் சுவை நிறைந்த கவிதைகள் அதிகம் உண்டு. இங்கு உரையாடல் ஒரு கருவி எனினும் அவ் உரையாடல் காட்சிகள் இரண்டும் கவிதையில் நாடகம் போலக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காட்சிப் படிமம் வாசகனுக்கு நாடகத் தமிழ்ச் சுவையையும் முப்பரிமான அனுபவத்தையும் வழங்குகிறது.

'2020 தை மாதத்தில் இன்று' என்ற கவிதையில் அடுத்தடுத்து வரும் காட்சிகளும் கவிஞரின் கூற்றும் மேடையில் நடைபெறும் கவிதை நாடகம் போல வெற்றிடத்தில் காட்டப்படும் லேசர் காட்சி போலவும் மாறி மாறி விரிந்து கொண்டே செல்கின்றன.

இட ஆய்வு [topographical research]

அடிக்கருத்தை உணர்த்தும் பாதையில் கவிஞன் பயணிக்கும் போது அந்த அடிக்கருத்தின் தோற்றத்துக்கான அல்லது அவசியத்துக்கான இடச் சூழலை அவன் விளக்க வேண்டிய கடமை தோன்றுகிறது. இட ஆய்வு என்பது ஒரு கவிதையில் ஓர் இடத்தின் வரலாற்றாய்வாகவும் வளரக் கூடும். முனைப்புக் கருத்து அல்லது பாடுபொருள் போல இந்த இட ஆய்வு என்பது பேரலகு

[LARGER UNIT] என இல்லாமல் சிற்றலகாக [SMALLER UNIT] இருப்பினும் இதன் முக்கியத்துவம் பேரலகைக் காட்டிலும் சிறிதும் குறைந்ததன்று. '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் கோவில் குட முழுக்கு என்பது பாடு பொருளாக இருப்பதால் அக்கோவிலின் இருப்பிடமும் வரலாறும் இங்கு இட ஆய்வு எனும் அலகாக இடம் பெறுகிறது. இக்கவிதையில் ராசராச சோழன் தமிழகத்தில் முதன்முதலாக மிகப்பெரிய இலிங்கத்தை அமைத்துக் கோவில் எழுப்பினான். இக்கோவில் பல சிறப்புகளைக் கொண்டிருப்பதனால் நடுவண் அரசின் தொல்லியல் ஆய்வுத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ளது.

தமிழ்நாடு வடக்கே இருந்து வந்த மன்னர்களின் ஆட்சியில் கைமாறி வந்ததனால் தமிழின் சிறப்பு மறைக்கப்பட்டது. விஜயநகரப் பேரரசை கிருஷ்ணதேவராயர், மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த சரபோஜி மன்னர்கள், ஆந்திராவைச் சேர்ந்த நாயக்க மன்னர்கள் ஆகியோர் இந்து மதத்தைப் போற்றி அந்தணர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்த வேளையில் கோவில்களில் இருந்து தமிழ் வெளியேற்றப்பட்டதைக் கண்டும்

காணாமலும் இருந்துவிட்டனர். நான்கு வருணப் பாகுபாடு இம்மண்ணில் ஆழமாகக் காலூன்றிய காலம் அது. கோவில்களில் சமஸ்கிருதம் சிறப்பிடம் பெற்றது. தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

வைணவ சமயத்தில் தமிழைப் போற்றியவர் தென்கலை என்று சமஸ்கிருதத்தைப் போற்றிய வடகலையினர் ஒதுக்கி வைத்துவிட்டனர். மொழியின் காரணமாகவே இச்சமயம் இரண்டாகப் பிளவுபட்டது. தமிழகத்தில் மொழி வரலாறும், இட வரலாறும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதை.

எத்தனை படையெடுப்பு

எத்தனை எத்தனை ஏகடியங்கள்

என்ற கவிதை வரிகள் நுட்பமாக வெளிப்படுத்துகின்றன.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மன்னர்களின் ஆட்சியில் தமிழகம் பட்ட அவலங்களையும் அவமானங்களையும் சுட்டுகின்றது. மேலும் ஆட்சி செய்ய வந்த அயலார் தங்களின் மக்களையும் இங்குக் கொண்டு வந்து குடி அமர்த்தியதால்

அவர்களின் கேலிப் பேச்சும் நையாண்டியும் இங்கு வாழ்ந்த தமிழரைப் புண்படுத்தின.

செம்மொழியாம் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு தனிமொழித் தகுதிபெற்ற மொழிகளைப் பேசும் மன்னர்களால் பட்ட அவமானங்களைச் சுட்டிச் செல்கின்ற கவிதை வரிகள்,

தமிழில் குடமுழுக்கு நடத்தப் போராடிய வரலாறு

சென்ற ஆண்டு டிசம்பர்த் திங்கள் 28 ஆம் நாள் கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அதற்கான வேண்டுகோள் மாநாட்டு இந்த ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் நாள் தஞ்சையில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவை வரவேற்று திமுக, மதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி ஆகியன் காங்கிரஸ், பா.ம.க. பொதுவுடைமைக் கட்சிகள் தமிழர் தேசிய முன்னணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியன தமிழில் குட முழுக்கு வேண்டி அறிக்கை வெளியிட்டன. உடனடியாக தனித்தனியாக அறிக்கை வெளியிட்டன.

முன்னர் 2015ஆம் ஆண்டில் டிசம்பர் 16ஆம் நாள் வெளியிடப்பட்ட நீதிமன்றத்

தீர்ப்பில் இன்ன மொழியில் இன்ன சாதியினர் தான் கோவிலில் பூசை செய்ய வேண்டும் என்று எந்த ஆகம விதியும் கிடையாது என்று கூறிவிட்டது. ஆனால் தினமணி பத்திரிக்கை ஆசிரியர் வைத்தியநாதன் போன்றோர் கோவிலுக்குள் கருவறைக்கு வெளியே நீச பாஷையில் தமிழில் திருமுறைகள் ஓதட்டும் . கருவறையில் சமஸ்கிருதம் மட்டுமே ஒலிக்க வேண்டும் அது போலவே குடத்தின் மீது புனித நீர் ஊற்றப்படும் போதும் சமஸ்கிருதம் மட்டுமே ஒலிக்க வேண்டும் என்று எதிர் வழக்காடினர். சத்தியவேல் முருகனார் என்ற தமிழ்ப் பற்றாளர் இந்துத் தமிழ்க் கோவில்களில் ஸ்மார்த்த பிரமாணர்கள் கருவறைக்குள் நுழையக் கூடாது கொடி மரம் தாண்டி உள்ளே கால் வைக்கக் கூடாது என்று ஆகமங்கள் கூறுவதாகத் தெரிவித்தார்.

திருமுறை கண்ட சோழன் இராச ராசன்

பிரகதீச்வரத்தைக் கட்டிய இராசராசன் திருமுறைகளை சிதம்பரம் தீட்சிதர்களிடம் இருந்து மீட்டுக் கொண்டு வந்ததால் ‘திருமுறை கண்ட சோழன்’ என்று அழைக்கப்பட்டான். அக் கோவிலில் திருமுறைகளை ஓதிப் பூசனைகள் செய்ய ஒரு குழுவை ஏற்படுத்தி அதற்குப் பவனப்பிடாரன் என்பவனைத் தலைவனாக நியமித்தான். இக்

கோவிலுக்கென்று தமிழ் மறை ஓதுவார் 48 பேரை நியமித்தான் இக்கோவிலில் இன்று தமிழில் குடமுழுக்கு நடத்த நீதிமன்றம் வரை சென்று தீர்ப்புப் பெற்று ஒரே ஒருவர் மட்டும் கோபுரத்தின் குடத்தின் மீது புனித நீர் ஊற்ற அனுமதிக்கப்பட்டார் என்றும் மற்றவர்கள் திருமுறைகளை மட்டுமே ஓதிக்கொண்டு நின்றனர் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. இப்பின்னணியில் கவிஞர் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

‘எத்தனை படையெடுப்பு

எத்தனை எத்தனை ஏகடியங்கள்’

என்ற வரிகள் தமிழின் மொழி வரலாற்றையும் தமிழக மக்களின் மொழிப் போராட்ட வரலாற்றையும் அவர்களின் வேதனையையும் எடுத்தியம்பி இக்கவிதைக்கான காலத்தின் கட்டாயத்தையும் உணர்த்துகின்றன.

அடிக்கருத்து வகைகளும் இக்கவிதையும்

லூயிஸ் சிம்சன் என்ற அறிஞர் ஒரு கவிஞன் தனது கவிதையின் அடிக்கருத்தினை மூன்று வகையாக அமைக்கலாம் என்பார். 1. ஒரு சிந்தனைப் பொழிவின் மூலச் செய்தி 2. ஒரு பாத்திரத்தின் உயிர்ப் பண்பு 3. ஒரு பயிற்சியின் மையப்பொருள் என்பனவாகும்.

இம்மூன்று வகைகளில் ‘2020 தை மாதத்தில் இன்று’ என்ற சிந்தனைப் பொழிவு [FLOW OF THOUGHT] என்ற வகையைச் சேர்ந்ததாகும்.

அடிக்கருத்தைக் கண்டறிய உதவும் தொன்ம உத்தி முறை

அடிக்கருத்தை வாசகனுக்குக் குறிப்பாக உணர்த்த தொன்மம், படிமம், குறியீடுகள் போன்ற இலக்கிய உத்திகள் உதவுகின்றன. தொன்மம் என்பது ஒரு கவிதை உத்தியாகும். பிரக்தீச்வரம் என்ற இக்கவிதையில்

எத்தனை எத்தனை

மொழிகள்

வந்து போயின.

நீச்சம் பெற்றன

தேவ பாஷைகள்

நீ அறியாததா?”

என்ற வரிகள் தேவ பாஷையான சமஸ்கிருதம் தான் முன்பிருந்த உயர் நிலையை விட்டுக் கீழே இறக்கப்பட்டதை உணர்த்துகின்றன. தேவ பாஷை என்ற சொற்றொடர் ஒரு தொன்மத்தில் இருந்து வந்ததாகும். தொன்மம் [MYTH] என்பது

இயற்கையான ஒரு நிகழ்வுக்குக் கற்பனையான ஒரு காரணத்தை கற்பிப்பதாகும். தமிழ் என்பது இயற்கையாகத் தோன்றி வளர்ந்த மொழி. ஆனால் சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் சிவபெருமானின் உடுக்கு ஓசையிலிருந்து தோன்றின என்பது தொன்மக் கதையாகும். இயற்கையாகத் தோன்றி வளர்ந்த மொழியை மொழி ஆய்வாளர் கிரேக்கத்தில் *GENETO* என்பர். சமஸ்கிருதம் போல செயற்கையாக உருவாக்கப்பட்ட மொழியை *POEO* [போலச் செய்தது] என்பர். தமிழ் சிவபெருமானின் உடுக்கை ஓசையிலிருந்து தோன்றியது என்பது தொன்மம்.

தமிழ் இயற்கையாகத் தோன்றிய மொழி; சமஸ்கிருதம் பாலி பிராகிருதம் ஆகிய மொழிகளிலிருந்து தோன்றிய செம்மைப்படுத்தப்பட்ட மொழியாகும். எனவே, அம்மொழியை உருவாக்கியவர்கள் தெய்வ காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி அதனை தேவ பாஷா என்று அழைத்துக் கொண்டனர். இம்மொழியை பேசுவதற்கு யாரும் பயன்படுத்தவில்லை. ஆரம்பத்தில் தெய்வ வழிபாடுகளுக்கும் சடங்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தினர். பின்னர் காளிதாசன் சாகுந்தலம், குமார சம்பவம் போன்ற காவியங்கள் படைக்க பயன்படுத்தினார்.

சமஸ்கிருதத்துக்கு ஆரம்பத்தில் எழுத்து வடிவம் கிடையாது. அம்மொழியின் வேதங்கள் செவி வாயிலாகக் கேள்வி ஞானமாக பரப்பப்பட்டன. பின்னர் தேவநாகிரி என்ற எழுத்து வடிவத்தை நாகிரி என்ற பண்டைய எழுத்து வடிவில் இருந்து பெற்றனர். நாகரி என்ற எழுத்து வடிவம் தமிழரின் ஆதி குடிகளான நாகர்கள் பயன்படுத்தியதாகும் அதில் சிறிய அளவில் மாற்றம் செய்யப்பட்டு சமஸ்கிருத மொழிக்கான எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டது. அதனால் நாகரியில் இருந்து வேறுபடுத்திக் காட்ட தேவ நாகரி என்று பெயர் சூட்டிக்கொண்டனர். தமது மொழியை தேவா பாஷை என்றும் தமது எழுத்து வடிவத்தை தேவநாகரி என்றும் அழைத்துக் கொண்டனர். மற்ற மொழிகளை நீச்ச பாஷைகள் என்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கவிஞர் "நீச்சம் பெற்றன, தேவ பாஷைகள்" என்கிறார். இவ்வாறு சிவனது உடுக்கையில் இருந்து மொழிகள் தோன்றின என்ற தொன்மத்தைக் கடுமையாகச் சாடுகிறார். உலகில் எத்தனையோ மொழிகள் இருக்கத் தனது மொழியை மட்டும் தேவ பாஷை என்று அழைத்தது தகாது என்பது கவிஞர் இக்கவிதையில் எழுப்பும் கண்டனக்குரல் ஆகும்.

இன்றைக்குத் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் நடந்த குடமுழுக்கு நிகழ்ச்சியில் தேவ பாஷை என்று அழைக்கப்பட்ட சமஸ்கிருதம் தன்னுடைய முக்கியத்துவத்தை இழந்ததால் நீச்சம் அடைந்தது என்று குறிப்பிடுகிறார்.

அடிக்கருத்தை உணர்த்தும் குறியீட்டு உத்தி

நவீனத் தமிழ் இலக்கியத்தின் உத்தியாக விளங்கும் குறியீடு '2020 தை மாதத்தில் இன்று' என்ற இக்கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேந்தன் என்ற ஒற்றைச் சொல் இங்குக் குறியீடாக அமைந்து பெரும் பொருள் விளக்கத்தை நல்குகிறது. இக்கவிதையில் இராஜராஜன் (இராசராசன்) இரண்டு நிகழ்வுகளில் இடம் பெறுகிறான். ஒன்று அவன் பெருவுடையாருடன் உரையாடிக் கொண்டிருப்பது; இரண்டு, அவன் தன் மகன் ராஜேந்திர சோழனுடன் உரையாடுவது; இக்கவிதையில் இராஜராஜனும், இராஜேந்திரனும் என இரண்டு வேந்தர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தப்பிப் பிழைத்த

தவ மகவு

தொல்காப்பியக் காப்பியன்

நானிலத்தில்

வேந்தன் மேய தீம்புனல்

உலகென்றான்.

என்ற கவிதை வரிகளில் அடிக்கருத்தியல் ஆய்வுக்கு வலுச் சேர்க்கும் ஒரு குறியீட்டுச் சொல் வடிவம் இடம் பெற்றுள்ளது. அச் சொல் வேந்தன் என்பதாகும்.

வேந்தன் பற்றித் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் காட்டும் ஒரு நூற்பா வரியைக் கவிஞர் முத்தமிழ் விரும்பி இவ்வரிகளில் மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்றதன்படி தொல்காப்பியம் எழுதப்படுவதற்கு முன்பே இலக்கியம் இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர் முடிவு. . தொல்காப்பியத்தில் ''என்ப' 'என்மனார் புலவர்' 'என்றிசினோரே'' என வரும் சொற்கள் 'இதற்கு முன்பும் இக்கருத்துக்கள் பலரால் சொல்லப்பட்டன' என்பதை விளக்குவதால் தொல்காப்பியத்துக்கு முன்பு இலக்கியங்கள் இருந்தன என்பது தெளிவாகின்றது.

தப்பிப்பிழைத்த,

தவ மகவு

தொல்காப்பியக் காப்பியன்

நானிலத்தில்

வேந்தன் மேய தீம்புனல்

உலகென்றான்

என்ற வரிகளில் வேந்தன் என்பவன் தீம்புனல் உலகம் [FRESH WATER REGION] எனப்படும் நன்னீர் நிலப்பகுதிக்குத் தலைவன் என அறியப்பட்டான். என்பதை உணர்த்துகிறது. தொல்காப்பியம் வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலத்துக்குத் தலைவன் வேந்தன் என்கிறது. மருத நிலம் என்பது நெல் வயல்கள் நிறையக் காணப்படும் நிலப்பகுதி ஆகும். வேந்தன் என்றால் உடல் வலிமை நிறைந்தவன் என்று அகராதிகள் பொருள் கூறுகின்றன. வேந்து என்றால் வலிமை. மற்ற நிலங்களுக்குச் சேயோன் மாயோன் வருணன் என்று கடவுளர் பெயரைக் குறிப்[பிட்ட தொல்காப்பியர் மருத நிலத்துக்கு மட்டும் மனிதர்களின் தலைவனைக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் வந்த உரையாசிரியர்கள் வேந்தன் என்பவன் இந்திரன் என்று பொருள் கூறினாலும் தொல்காப்பியர் அப்பெயரைக் குறிப்பிடவில்லை. காவிரியாறு பாயும் தஞ்சாவூர் நெல் வயல்கள் நிறைந்த நன்னீர் நிலப்பகுதியாகும் மருத நிலத்தில் வேந்தன் என்பவன் மற்ற நிலங்களில் வணங்கப்படும்

சேயோன் மாயோன் வருணனைப் போன்ற சீரும் சிறப்பும் உடையவன்.

தொல்காப்பியருக்கு அடைமொழியாக "தப்பிப் பிழைத்த தவ மகவு" என்ற தொடர் காணப்படுகிறது. இலக்கியங்களும் இலக்கண நூல்களும் கடல் கோளால் அழிந்த பின்பு தப்பிப் பிழைத்தது தொல்காப்பியம் என்னும் அரும்பெரும் நூலாகும். எனவே தமிழினம் செய்த தவத்தால் தப்பிப் பிழைத்த அருந்தவப் புதல்வன் தொல்காப்பியன் என்று கவிஞர் சுட்டுகின்றார். நானிலம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு வகை நிலங்களைக் குறிக்கிறது. இவற்றில் மருத நிலம் என்பது நெல் வயல்கள் மற்றும் வயல் சூழ்ந்த நிலப் பகுதிகளையும் குறிக்கிறது. வேந்தன் மருத நிலத்துக்கு உரிய தலைவன் என்று அழைக்கப்பட்டான்.

'சோழ வள நாடு சோறுடைத்து' என்பர். சோறு வளம் நிரம்பிய சோழ நாட்டின் தலைவனாக விளங்கிய மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இராஜராஜ சோழன் மற்றும் இராஜேந்திர சோழன் ஆவர். இவர்கள் இருவரும் தனித்து உரையாடும் கற்பனைக் காட்சியாக வைக்கப் பட்டாலும் அக்காட்சி தமிழர் அறம் பற்றிக் கூறும் பொருள் பொதிந்த காட்சியாக விளங்குகிறது. வேந்தன் அல்லது

மன்னன் எனப்படுவான் மருத நிலத்தின் தலைவனே ஆவான் என்பதை மேற்காணும் வரிகளின் மூலமாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்பு உடனடியாக அவர்களின் உரையாடலை இடம்பெறச் செய்யாமல், சைவ மடங்களில் புழங்கி வந்த மொழி நடை முறைகள் கைப்பற்றிய கருத்துக்களை முன் வைத்த பின்னர் அவர்களின் மொழி இடம்பெறச் செய்கிறார். காரணம் யாதெனில் அதில் அவர் வேந்தன் யார் என்பதற்கு மட்டுமே வகையில் தொல்காப்பியர் கருத்தை மேற்கோளாக முன்வைக்கிறார். தலைக்குமேல் மகுடம் சூடிய அனைவருமே வேந்தர்கள் ஆகிவிடுவதில்லை.

ஆரியர்களாக இனங்கண்டறியப்பட்ட பார்ப்பனர் மட்டுமல்லாது தஞ்சை மண்ணில் விளைந்த நெல்லிலிருந்து பெற்ற அரிசிச்சோறு சாப்பிட்ட சைவ மதத்தைச் சேர்ந்த உள்ளூர் மடாதிபதிகளும் [ஆதீனங்கள்] தமிழுக்குத் துரோகம் செய்கின்றனர் இவர்கள் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்காமல் சமஸ்கிருதத்தை ஆதரிப்பது தகாத செயல் என்பதைக் காட்டும் வகையில்,

ஆதீனத்துக் கைக்குத்தல்

அரிசிக்கஞ்சி குடித்தவன்

காட்டிக் கொடுக்கிறான்

என்ற வரிகள் அமைந்துள்ளன. தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் நெல் வேளாண்மைக்குச் சிறப்பு பெற்றதாகும். இங்குப் பலவகை உயர் தரமான நெல் பயிரிடப்படுகிறது. மன்னர் காலத்தில் சைவ மடங்களுக்கு ஹெக்டேர் கணக்கில் வயல்கள் தானமாக வழங்கப்பட்டன. நெல் வயலில் இருந்து பெறப்பட்ட நெல்லை அவித்துக் கை குத்தல் அரிசி ஆக்குவதற்கு நீண்ட மனித உழைப்பு தேவைப்படுகிறது. அவ்வாறு பெற்ற கைக்குத்தல் அரிசியில் இருந்து சத்துணவுக் கஞ்சி வைத்து சாப்பிடும் ஆதீன கர்த்தாக்கள் தங்களுக்கு உயர்தர உணவு வழங்கிய தமிழ் நிலத்துக்கு நன்றி பாராட்டாமல் வடக்கே இருந்து வந்த சமஸ்கிருதத்தை உயர்வான மொழியாகக் கருதி சம்ஸ்கிருத மொழியில் குடமுழுக்கு விழாவை நடத்த ஆதரவளிக்கின்றனர்.

அடிக்கருத்து அலகுகள்

‘2020 தை மாதத்தில் இன்று’ என்ற கவிதையின் அடிக்கருத்தை அறிவதற்கு கவிதையின் கட்டமைப்பைக் கொண்டு அதன் அலகுகளை நிரல் படுத்தி ஆராயலாம் இக்கவிதையில் மொழி அரசியலை முன்னிறுத்தி,

1. இறைவனும் மன்னவனும்
2. மொழி அரசியல்
3. நிலவுடமைத்துவம்
4. தமிழ்மறை காட்டும் வாய்மை
5. நீர்ச் சடங்கு/ நீராட்டு
6. இன நலமும் குண நலமும்

என்று அடுக்கிக் கொண்டு வந்து நிறைவாக மக்களின் குருதியின் அணுக்கள் இன்னும் மாறவில்லை. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது உலக இயல்பு. ஆனால் தமிழ்நாட்டில் மருதநில மக்கள் நெல் அறுவடை தமிழில் உரையாடுதல், இலக்கியக் கூட்டங்கள் நடத்துதல், தமிழுக்காக வழக்காடுதல் என்று பல்வேறு வகையில் தமிழோடு உறவு கொண்டிருந்தாலும் இன்னும் வெள்ளந்தியாகவே இருக்கின்றனர். அவர்களால் ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோவிலில் கூடக் குடமுழுக்கு நடத்த தமிழுக்கான ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தர இயலவில்லை என்பதைக் காட்டுகிறது. அது போல ஆரியர்கள் என்றறியப்பட்ட பார்ப்பனர்களும் எந்தனை ஆண்டுகள் கடந்தாலும் தமிழைப் புறந்தள்ளிவிட்டு சமஸ்கிருதத்தை முன்னிறுத்தும் முயற்சியைக் கைவிடுவதாக

இல்லை. அவர்களின் ரத்தத்தின் அணுக்களும் மாறவில்லை.

தமிழக மக்களிடம் தமது மொழியின் தகுதியை உயர்த்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டாலும், அவற்றின் பலன் எதிர்பார்த்தபடி அமையவில்லை. கவிஞர் ஒரு வாசகனைப் படிக்கட்டில் ஏற்று நடத்திச் செல்வது போல ஒவ்வொரு கருத்தையும் அடுத்தடுத்துச் சொல்லி தனது வாசகரைத் தான் சொல்ல முக்கியக் கருத்துக்கு அழைத்து வருகிறார்.

அரிமா நோக்குடைய இணைப்பு

அரிமா நோக்கு என்பது முன்னும் பின்னும் காண்பதாகும். சிங்கத்தின் இப்பழக்கத்தை அரிமா நோக்கு என்பர். கவிஞர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு மன்னர் இறைவனோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் காட்சியை விளக்கும் போது இன்றையச் சூழலையும் சேர்த்துக் காட்டுகிறார். இன்றைக்கு எல்லோருக்கும் தொல்லை கொடுக்கும் கொசுக்கடியை மறக்கவில்லை. இறைவனாயினும் மன்னனாயினும் கொசுக்கடிக்குத் தப்பவியலாது என்ற தற்காலப் பிரச்னையையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார். இதுவே அரிமா நோக்குடைய

கால இணைப்பு ஆகும். இது ஒரு அங்கதச் சுவை அமைந்த வரி ஆகும்.

“ஆயிரம் ஆண்டுகள் கடந்து

நிம்மதியாக உறங்கப் போவதாக

என்னிடம்

உறுதிபடக் கூறினர்”

என வரும் இவ் வரிகளில் கவிஞரும் ஓர் அங்கமாக இணைந்து இருப்பதைக் காணலாம். இறைவனும் மன்னவனும் பேசும்போது கவிஞர் அவ்விருவருடன் இருந்தாரா அல்லது அவர்கள் உரையாடி முடித்த பிறகு இவரிடம் வந்து கூறினார்களா? என்பதை வாசகரின் புரிதலுக்குக் கவிஞர் விட்டுவிடுகிறார்.

உரையாடல் உத்தி

மக்களின் வழிபாட்டுச் சடங்கு குறித்து மன்னவனும், இறைவனும் உரையாடல் நடத்தியதாகக் கூறுவது ஒரு போன்மை (imitation) வழக்காகும். உண்மையில் அன்று இரவு தமிழ் ஆர்வலர்கள் இவ்வாறு பேசிவிட்டு இறுதியில் நிம்மதியாக உறங்கியிருப்பர். இதனைச் சற்று மிகைப்படுத்திக் கவிஞனுக்குரிய கற்பனையைப் புகுத்திப் பெருவுடையாரும், இராசராசனும் பேசியதாகக் கவிதையைத் தொடங்கியிருப்பது சுவைமிகு தொடக்கத்துக்கான ஓர் உத்தி ஆகும்.

சிறுகதையின் தொடக்கம் குதிரை பந்தயத்தைப் போல இருக்க வேண்டும் என்பர். அது போல இக்கவிதையின் தொடக்கமும் அமைந்துள்ளது.

1. இறைவனும் மன்னவனும்

பிரக்தீச்வரம் கவிதையின் தொடக்கப் பகுதியில் உண்மையும் கற்பனையும் கலந்துள்ளது. அதில் பேசப்பட்ட பேச்சு உண்மையானது. பேசிய நபர்கள் கற்பனையானவர்கள். இப்பகுதி கற்பனையும், உண்மையும் இணைந்த சிறப்புக் கூறாகும். தமிழ் ஆர்வலர்கள் வழக்கு நடத்தி வெற்றி பெற்றதாகக் கருதுவது உண்மை அல்ல என்ற கருத்தை உணர்த்துவதற்கு கவிஞர் கற்பனை உரையாடல் உத்தி முறையை இங்கு பயன்படுத்துகிறார். உண்மையும் கற்பனையும் கலந்த உத்தி முறையின் மூலமாக மக்களின் அறியாமையைச் சுட்டிக்காட்டுகிறார். இது அடிக்கருத்தின் அடிப்படைச் சிற்றலகுகளுள் ஒன்றாகும்.

2. மொழி அரசியல்

உலக நாடுகள் அனைத்திலும் வேந்தனின் ஆதரவு பெற்ற மொழியே *[royal patronage]* வழிபாட்டு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் சிறப்புத் தகுதி படைத்து விளங்கியது. அவ்வாறு தமிழகத்திலும்

பல்வேறு மன்னர்கள் படையெடுத்து வந்த போது சிலர் தமிழோடு சேர்த்தும் சிலர் தமிழை விட்டுவிட்டும் வடமொழிக்கு ஆதரவு அளித்தனர். அப்போது வடமொழியை தேவ பாஷை என்றும் தமிழை நீச பாஷை என்றும் கேலி பேசினர். இன்றுவரை வடமொழியான சமஸ்கிருதத்தை தேவபாஷை என்று பார்ப்பனர்கள் கூறும் போக்கு மாறவில்லை. மொழிகளின் இடையே காணப்படும் இந்த அரசியல் போக்கைக் கவிஞர் எடுத்துக்காட்டுகிறார்.

தஞ்சாவூரில் நடக்கும் குடமுழுக்கு தமிழில் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் வரைச் சென்ற தமிழ் ஆர்வலர்கள் என் நிலம் சங்க இலக்கணம் உணர்த்தும் மருத நிலம் என்பதை இக்கவிதை இவ்விடத்தே ஆழமாகச் சுட்டிச் செல்கிறது.

விண் மீன்கள்

போர்த்திக் கொள்ளும்

மருதத்து இரவதனில்

உரையாடிய களிப்பில்

தூங்குக நண்பர்காள்

என்ற வரிகள் மருத நிலத்தைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள் தமிழில் குட முழுக்கு நடத்திய

மன நிறைவில் இருப்பதைக் காட்டுகிறது. இதன் பிறகு மருத நிலத்தில் வாழும் சேற்றுக் கால் செல்வர்கள் அறுவடைப் பணிக்குச் சென்று விடுவர். அதன் பிறகு இவர்கள் குட முழுக்குப் பற்றியோ தமிழைப் பற்றியோ அக்கறைப்பட மாட்டார்கள் என்பதைக் கொண்டு கூட்டுப் பொருள் கோள் முறைப்படி கவிதையின் இறுதிப்பகுதியில்

''மருதத்தில்

அடுத்த மாசம்

அறுவடை நாள்

முப்போதும்

உங்கள் கனவிலும்

தமிழில் தான்

உரையாடுவேன்''

என வரும் வரிகளைக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். இவ்வரிகள் மக்களின் கடமை உணர்ச்சியையும் மொழிப் பற்றையும் விவரிக்கின்றன.

முதலில் இறைவனையும், மன்னவனையும் பேசவிட்டுப் பின்பு அரசியல் படையெடுப்புகள், மொழி அரசியல் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி அதன் பிறகு தஞ்சையின் மருத நில மாண்பை

விரித்துரைத்து, இவர்கள் கனவிலும் தமிழ் பேசி மகிழும் மனப்பான்மை உடையவர்கள் என்று அவர்களின் தமிழ்ப் பற்றை விளக்கி வரும் இக்கவிதை முத்தாய்ப்பாகத் தனது அடிக்கருத்தைப் பகர்கின்றது.

கவிஞர் '2020 தை மாதத்தில் இன்று' என்ற இக்கவிதையின் மூலமாக வாசகரை மரத்தின் உச்சியில் இருந்து மெல்ல மெல்ல அதன் அடிநாதமான வேருக்கு அழைத்து வருகிறார். தமிழ் ஆர்வலர்கள் உச்சிக்கொம்பில் நின்று தாம் வெற்றி பெற்றுவிட்டதாகக் கூத்தாடுகின்றனர். ஆனால் மெல்லக் கீழிறங்கி வந்தால் அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பது புரியவரும். மறைக்கப்பட்ட உண்மை மண்ணுக்குள் காணப்படும் ஆணி வேர் ஆகும். தமிழ் மக்கள் சமஸ்கிருத ஆதரவாளர்களால் தொடர்ந்து ஏமாற்றப்படுவதன் காரணத்திற்கான வேரைத் தேடிச் செல்லும் இப்பயணமாக இக்கவிதை படைக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்மறை காட்டும் உண்மை

இராசராச சோழன் தஞ்சை பெருவுடையாரம் நடத்திய உரையாடல் குடமுழுக்கைத் தமிழில் நடத்தி வெற்றிபெற்ற மனநிறைவைச் சுட்டுகிறது. இதற்கு அடுத்து

சோழனிடம் அவன் மகன் இராஜேந்திரன் பேசுகின்ற நடத்தும் உரையாடல் தங்களிடம் பொய் சொல்லப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டத் தமிழ் மறையாம் திருவள்ளுவத்தின் கருத்து எடுத்தாளப்படுகிறது. அவர்கள் உள்ளத்தால் பொய்யால் ஒழுகும் கள்ள மனம் படைத்தோர் என்பதை இராசேந்திரன் தன் தந்தைக்குப் புலப்படுத்துகிறான்.

"பெரு வேந்து

இளவரசன்

இராசேந்திரன்

இறுதியாய்ச் சொன்னான்

'அப்பா

புறந்தூய்மை நீரால்

அகந்தூய்மை

வாய்மையால்

நமது வள்ளுவம் காட்டும்

ஆதி விதி' என்றான்

இவ்வரிகள் குடமுழுக்கு தமிழில் நடைபெற்றது என்று இவர்கள் பேசிக் கொள்வதும் நம்புவதும் பொய். குடமுழுக்கின் போது அதிகமானோர் இனிய குரலில் திருமுறைகளை ஓதியது மட்டுமே உண்மை. ஆனால் குடமுழுக்கு சமஸ்கிருத மொழியில் மந்திரங்கள் ஓதி நடத்தப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ் இணைக்கப்படவில்லை. ஒரே ஒருவர் மட்டுமே திருமறை ஓதி புனித நீர் ஊற்றினார் என்கிறார்கள். காலம்காலமாக சிவன் கோவில்களில் திருமுறை ஓதும் நடைமுறை தொடர்ந்து வருகிறது

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு இம்முறை ஓதுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்-பட்டுள்ளது. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதுவல்ல தமிழ் ஆர்வலர்கள் எதிர்பார்த்ததும் இதுவல்ல. மத்திய மாநில அரசுகளும் கோவிலின் சமஸ்கிருதப் பற்றாளர்களும் தமிழ் ஆர்வலர்களிடம் பொய் சொல்லிவிட்டனர், என்று இராஜேந்திர சோழன் தன் தந்தை இராசராச சோழனிடம் கூறுவதாக இக்கவிதையில் அடுத்த கற்பனை உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இராசராசனுக்கு பெருவுடையாரிடம் உரையாடியபோது கிடைத்த மகிழ்ச்சி தனது மகன் இராசேந்திரனிடம் பேசிய போது

காணாமல் போய்விட்டது. இங்கு கவிதையில் ஒரு திருப்பம் உண்டாகிறது. கவிதையின் தொடக்கத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இன்று நிம்மதியாக உறங்கப் போவதாக கூறிய இராசராசனுக்கு இனி உறக்கம் ஏது? இதைச் சுட்ட விரும்பிய கவிஞர் மருத நிலத்து மக்கள் இரவு நேரத்தில் உரையாடிய களிப்பில் தூங்குவதைக் காண்கிறார் "தூங்குக நண்பர்காள்" என்று வாழ்த்துகிறார்.

தமிழ் ஆர்வலர்களை நுட்பான முறையில் சமஸ்கிருத ஆதரவாளர்கள் ஏமாற்றியதைத் தன் குரலால் வெளிப்படுத்தாமல் இளவரசன் ராஜேந்திர சோழனின் குரலாகக் கவிஞர் வெளிப்படுத்துகிறார். இதுவும் ஓர் இலக்கிய உத்தியாகும். நாவல்களில் மௌத்பீஸ் கேரக்டர் என்று ஒரு கதாபாத்திரத்தை நாவலாசிரியர்கள் உருவாக்கி அதன் மூலமாகத் தன்னுடைய சொந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதுண்டு. அதுபோலக் கவிஞர் கவிதையில் தான் சொல்ல விரும்பிய முக்கியக் கருத்தை இராசேந்திர சோழனின் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

4. நீர்ச் சடங்கு

பண்டைச் சமூகங்களில் தூய்மைப்படுத்தும் சடங்குகள் இருவகைப் பட்டன. மேலைநாட்டினர் தண்ணீரால் தூய்மைப்

படுத்தினர். கீழை நாட்டினர் நெருப்பினால் தூய்மைப் படுத்தினர். கிறிஸ்துவ மதத்தின் நடைமுறையிலுள்ள ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு நீரால் தூய்மைப் படுத்தப்படும் சடங்கு முறைகளில் முக்கியமானதாகும். மத்திய ஆசியாவில் இருந்து வந்த மத்திய ஆசியாவிலிருந்து வட நாட்டுக்கு வந்த ஆரியர் அனைத்துத் தூய்மைச் சடங்குகளையும் தண்ணீரைக் கொண்டு செய்தனர். கோவில்களில் செய்யப்படும் இச்சடங்கு புனித நீராட்டு, குடமுழுக்கு, கும்பாபிஷேகம் என்று பல வகையில் அழைக்கப்பட்டது.

நிறுவனச் சமயங்களின் கடவுளருக்காக பெருங்கோவில்கள் கட்டப்பட்டபோது அங்கு வழிபாட்டுச் சடங்குகளில் பார்ப்பனர்கள் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோவில்களின் கோபுரங்களுக்குக் குடமுழுக்கு செய்ய வேண்டும் என்பதை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்.

சேரன் செங்குட்டுவன் இமயம் நோக்கிப் படையெடுத்துச் சென்றபோது அங்கு தமிழ் மன்னர்களை எள்ளி நகையாடிய கனகன், விசயன் என்ற இருவரின் தலையில் இமயத்தில் இருந்து பெயர்த்தெடுத்த கல்லை வைத்துத் தன் நாடு வரை சுமந்து வரச் செய்தான். வழியில் கங்கை என்னும் பேராறு ஓடுவதைக் கண்டு

அதில் அக்கல்லை நீராட்டினான். பின்பு சேரநாடு கொண்டுவந்து அவர்களின் தலையிலிருந்து இறக்கி சேர மாதேவியின் விருப்பப்படி கண்ணகிக்குச் சிலை எடுத்தான்.

தமிழர் வாழ்வியலில் கல் எடுப்பு என்பது இறைவனோடு தொடர்புடையது அல்ல. ஆதியில் அச்சடங்கு இறந்தவர்களைப் புதைக்கும் இடத்தில் கல் நட்டி வைப்பதைக் குறித்தது. நடுகல், புலி குத்திக்கல், மா சதி கல் ஆகியவை வழிபாட்டுக்கு உரியன என்றாலும் அவற்றிற்குக் கோபுரம் குடம் குடமுழுக்கு ஆகியன கிடையாது. நிறுவனச் சமய சம்பிரதாயங்களைப் பார்த்து போலச் செய்தல் முறைப்படி பின்பற்றிய (imitative rituals) தமிழர்கள் தங்களது நாட்டுப்புறத் தெய்வங்களுக்கும் கோவில் கட்டிப் பார்ப்பனர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் நடத்தினர். ஒவ்வொரு ஆண்டும் வருஷாபிஷேகம் என்றும் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் என்றும் நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் பல நதிகள் ஓடுவதால் அவற்றில் இருந்து குடம் குடமாக நீரை எடுத்துக் கோபுரங்களின் மேல் உள்ள கலசங்களுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. இக் கும்பாபிஷேகம் தமிழ்

மண்ணில் தமிழில் நடைபெறுகிறதா? பார்ப்பனர்களின் விருப்பப்படி சமஸ்கிருதத்தில் நடைபெறுகிறதா? என்பது குறித்துத் தமிழ் மக்கள் எவரும் கவலை கொள்வதில்லை

காவிரி நீர்

பொருநை நதி வையை

மணி முத்தாறு நீர்க்

குடமெடுத்து குடமெடுத்து

கோபுர கலசம்

முழுக்குச் செய்தோம்

மாற்றமில்லை

மாறவும் மாறாது

என்ற வரிகளில் பல்வேறு நதிகளில் இருந்து குடம் குடமாகத் தண்ணீர் எடுத்துக் குடமுழுக்கு தொடர்ந்து நடைபெறுகின்றது. நூற்றாண்டுகளாகப் போராடியும் கோவில்களில் எந்த நடைமுறையிலும் மாற்றம் கொண்டு வர முடியவில்லை என்ற கசப்பான உண்மையைக் கனிவாகச் சொல்லிச் செல்கிறது இக்கவிதை.

நதிகள் வற்றிப் போனால் என்ன செய்வது என்ற கவலை எழுந்தால் அதற்கும் கவலைப்பட வேண்டாம் எந்தக்காலத்திலும்

வற்றிப் போகாத கல்லணை வாய்க்கால் இருக்கிறது. அதிலிருந்து நீர் எடுக்கலாம் என்று வேதனையை மறைத்து வேடிக்கையாகப் பதில் அளிக்கின்றார் இங்கும் ஓர் அங்கதச்சுவை *[SUBTLE HUMOR]* அமைந்துள்ளது. கல்லணை என்பது கரிகாலச் சோழன் கட்டியதாகும்.

“மாநகராட்சி குழாய்

கல்லணைக் கால்வாயில்

இன்னும்

நீருண்டு”

என்ற வரிகள் தஞ்சையில் தண்ணீருக்கா பஞ்சம்? என்ற வினாவை எழுப்பிக் கவலைப்பட வேண்டாம் என்ற ஆறுதலை அளிக்கின்றது. கரிகாலன் கட்டிய கல்லணை அதன் சிறப்பான தொழில்நுட்பம் மற்றும் உறுதித்தன்மையைப் பாராட்டி மேனாட்டு அறிஞர் சர் ஆர்தர் காட்டன் *the grand anaicut* என்று அழைத்தார். இந்த அணைக்கட்டின் கால்வாயில் எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும். அந்தத் தண்ணீரைக் குடமுழுக்குக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். காவிரியாறு வற்றினாலும் கால்வாய் வற்றாது என்ற நுட்பமான கருத்தைச் சொல்லும் இக்கவிதை குடமுழுக்கைப் பார்ப்பனர்கள் நடத்தினாலும் கோவில் தமிழ் மன்னன் கட்டிய

கோவில் என்பதால் எக்காலத்திலும் தண்ணீர் மறுக்கப்படாது. தமிழ் மன்னன் கட்டித் தந்த கோவிலுக்கு இன்னொரு தமிழ் மன்னனின் கல்லணையில் இருந்து தண்ணீர் வழங்கப்படும். இவ்வரிகள் தமிழரின் பண்பு நலத்தைக் குறிக்கின்றன.

நிறைவு

'2020 தை மாதத்தில் இன்று' என்ற இக்கவிதை தமிழர் இன நலமும் குண நலமும் பற்றி நிறைவான கருத்தை எடுத்துக்கூறி நிறைவாகத் தனது அடிக்கருத்தை ஆழமாக உணர்த்துகிறது.

காவிரித் தாய் நதியின்

தொப்புள்கொடி உறவில்

இன்னும் இன்னும்

குருதியின் அணுக்கள்

மாறலியே

என்ற நிறைவுப் பகுதி அறிஞர் லூயிஸ் சிம்சன் அவர்கள் சொன்னபடி 'சிந்தனை பொழிவின் மூலச் செய்தி' ஆகும். *themes in literature* என்ற நூலில் அடிக் கருத்தைக் கண்டுபிடிப்பது எப்படி என்பதை விளக்கும் ச்டோடர்ட் மல்ற்கே [STODDARD MALARKEY] என்பவரும் டொனால்ட் மேக்ரே [DONALD MACRAE]

என்பவரும் அடிக்கருத்து ஆய்வு என்பது மையப் பொருளை நோக்கி அணுகிச் செல்வதாகும்' ஏனெனில் கவிதையின் மற்ற பகுதிகள் இம்மையப் பொருளைச் சார்ந்தே இருக்கும் என்றனர். இவர்களின் வழிகாட்டுதல் படி கவிதையின் பல கருத்துக்களைச் சிற்றலகுகலாகக் கொண்டு நிரல்படத் தொகுத்து வரிசையாக அணுகிய பின்பு அடிக்கருத்து நோக்கியதாக இவ் ஆய்வு அமைந்தது.

எலிசபெத் பிரண்ஸல் என்ற ஜெர்மானியர் தீம்ஸ் இன் வேர்ல்டு லிட்ரேச்சர் [tHEMES in world literature] என்ற நூலில் பல முனைப்புக் கருத்துக்கள் இணைந்து ஒரு அடிக்கருத்தை வழங்கும் என்றார். முனைப்பு கருத்து, அடிக்கருத்து அலகு என்றும் அழைக்கப்படும். ஒரு கவிதையில் நூற்றுக்கணக்கான அடிப்படை அலகுகள் இடம்பெறும் இவை முதன்மை அலகுகள் [primary units] ஆகும். இதுகாறும் வரிசையாக ஆராயப்பட்ட முனைப்புக் கருத்துக்கள் அல்லது அடிப்படை அலகுகள் நிறைவாக அடிக்கருத்தை எட்டிவிட்டன. சமஸ்கிருதப் பிரியர்களும் தமிழ் ஆர்வலர்களும் அவர்களின் குருதியின் அணுக்கள் இன்னும் மாறாமல் அன்றிருந்த படியே இன்றும் இருக்கின்றனர். இவ்விரு


இனத்தவரின் இன நலமும், குண நலமும் மாறவில்லை என்பதே இக்கவிதையின் அடிக்கருத்து ஆகும்.

கவிஞர் தான் சொல்ல வந்த மையக் கருத்தை உணர்த்துவதற்காக இக்கவிதையில் தனது வாசகர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு மொழி இன வரலாற்றுப் பண்பாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். பரப்புரை அல்லது கருத்துரை போல ஓரிடத்தில் நின்ற படி எடுத்துரைக்காமல் வாசகரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சேர்ந்து பயணித்து உண்மை நிலையை உணரும்படி செய்கிறார். இது ஒரு வகைத் தலைமை பண்பும் ஆகும்.

ஆற்றங்கரைகளில் வயல்களையும் வயல் சார்ந்த நிலங்களையும் உள்ளடக்கிய மருத நிலத் தலைவன் வேந்தன் எனப்படும் வலியவன் ஆவான். அவன் தலைமைப் பண்பிற் சிறந்தவன். கலைகளின் காவலன்.

நன்றி

முனைவர் வி. ஆனி லெட் பாமி அவர்களின் அடிக்கருத்தியல் – பண்பும் பயனும் என்ற கட்டுரை (பரல்கள் – ஐந்து), தமிழ் ஆய்வாளர் மன்ற வெளியீடு, மதுரை, 1991.



பொறிஞர் கவிஞர், கட்டுரையாளர், பாடலாசிரியர், நாடக நடிகர், குறும்பட நடிகர், திரைப்பட நடிகர், ஆவணப்பட இயக்குனர், சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், இலக்கியச் செயல்பாட்டாளர், திரைக்கதையாசிரியர், வசனகர்த்தா, இயக்குனர், சொற்பொழிவாளர், விமர்சகர் முத்தமிழ் விரும்பி தஞ்சை மண்ணை சேர்ந்தவர். கோவை பி.எஸ்.ஜி தொழில்நுட்பகல்லூரியில் பொறியியல் படித்தவர்.

நெருஞ்சி இலக்கிய இயக்கத்தை நிறுவி ஆண்டுதோறும் கவிஞர் பத்திரிகையாளர் எழுத்தாளர் எனப் பல துறை சார்ந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்.

கவிஞருடைய பூ மர நிழல், திட்டிவாசல் பெண்ணொருத்தி, உன்னோடு உரையாடுதல், காதல் மொழி, பார்வையில் பூத்த நிலா, தேனடையும் வரலாறு ஆகிய கவிதை நூல்கள் ஆங்கிலத்தில் *Shade of the Flowing Tree, Songs of Dryness, Speaking with You, The Language of Love, A Lady at the Little Gate, Honey Hive* முனைவர் செ. ராஜேஸ்வரி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, சென்னை எமெரால்டு பதிப்பகத்தாரால் வெளியிடப் பட்டுள்ளன. மலேசியாவில் மலாய் பல்கலைக் கழகம் கவிஞருக்குத் 'தமிழ் இலக்கியச் செம்மல்' என்ற விருதும், இலங்கையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கவிஞருக்கு 'திருவள்ளுவர் விருது' வழங்கி சிறப்பித்துள்ளது.

₹ 100/-

இந்நூல் பற்றி

"2020 தை மாதத்தில் இன்று" எனும் கவிதையின் அடிக்கருத்தாகிய "நினைத்தது நிறைவேறவில்லை" எனும் நுண்பொருளை இருவேறு கோணங்களில் இந்நூலாசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்கள் தெளிவுபடுத்துகிறார். அடிக்கருத்து ஆய்வு முதல் பகுதியில் கவிதை உள்ளடக்கிய சூழல், உளவியல், சமூகம், காலம், இடம், படிமம், தொன்மம், வரலாறு, சீரிய நகரம், ஊர், மன்னன் போன்ற பாடுபொருள்கள் வழி அடிக்கருத்தியல் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இக்கவிதை எத்தகைய கருத்துப் பரப்புகளிலிருந்து அடிக்கருத்துக்களை கொண்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. இலக்கிய ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இந்நூல் ஊன்றுகோலாய் உதவும் என்பதில் ஐயமில்லை.

வி. ஆனிலெட்பாமி

அடிக்கருத்தியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்